# நீதிபதி சரவணராஜா மீளவும் தனது பதவிக்குத் திரும்பி சுயாதீனமாகத் தனது கடமைகளைச் செய்யும் நிலையை அரசாங்கம் உடனே ஏற்படுத்தவேண்டுமென வலிறுத்தல்



## யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 29

அழுத்தத்துக்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியிருக்கும் நீதிபதி சரவணராஜா மீளவும் தன் பதவிக்குத் திரும்பி, சுயாதீனமான முறையில் தனது கடமைகளைச் செய்யக் கூடிய நிலையினை அரசாங்கம் உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா அவர்களின் பதவி விலகல் குறித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிப் பதவி உள்ளடங்கலாக நீதித் துறையிலே தான் வகித்த அனைத்துப் பதவிகளையும் அரசியல் ரீதியான அழுத்தங்களின் காரணமாகவும், உயிர் அச்சுறுத்தலின் காராணமாகவும் இராஜினாமாச் செய்துவிட்டு, இலங்கையிலே வாழ முடியாத நிலையில் நாட்டை விட்டு வெளியேறி இருக்கும் நீதிபதி ரி.சரவணராஜா அவர்கள் இன்று எதிர்கொண்டிருக்கும் நெருக்கடி ஜனநாயகத்தினையும் நீதியினையும் மதிக்கும் அனைவருக்கும் அதிர்ச்சி அளிப்பதுடன், இலங்கையின் நீதித் துறையின் சுயாதீனத் தன்மை எந்தளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதனையும் தெளிவாக வெளிக்காட்டுகிறது. 2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 12 வெள்ளிக்கிழமை 29.09.2023 கதிர் 82




## முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் நாட்டிலுள்ள தமிழர்களைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது

### ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கடும் கண்டனம்

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி உள்ளமை தமிழர்களை பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளதாக "ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு" தெரிவித்துள்ளது. இது இந்த நாட்டின் நீதிப் பொறிமுறையை கேள்விக்குள்ளாக்கியுள்ளதுடன், தமிழ் நீதிபதிகள் தீர்ப்பு வழங்க முடியாத நாட்டின்நாடாளுமன்றை ஒட்டு மொத்தத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் புறக்கணிக்க வேண்டும் எனவும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில், மிக உன்னதமான, நீதித்துறையில் தலைசிறந்த நீதவானாக குருந்தூர் மலை சட்டவிரோத பௌத்த கட்டுமானம் உள்ளிட்ட விவகாரங்களில் யாருக்கும் அடிபணியாமல் தீர்ப்புக்களை 2 ➤

## இலங்கையின் சரித்திரத்தில் நீதித்துறைக்கு ஏற்பட்டுள்ள அதி உச்ச அச்சுறுத்தல் – சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு!



இலங்கையின் சரித்திரத்தில் நீதித் துறைக்கு அதி உச்சமான ஓர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இது குறித்து கவனம் எடுக்க வேண்டிய நிலையில் தாங்கள் இருப்பதாக தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் - சுதுமலைப் பகுதியில் உள்ள தனியார் விடுதியொன்றில் இன்று காலை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு 2 ➤

## ஜனாதிபதியும் சட்டமா அதிபரும் பதிலளிக்கவேண்டும்!

### முல்லைத்தீவு நீதிபதி பதவி விலகியமை தொடர்பாக த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்து!

இலங்கை ஒரு தோல்வியடைந்த நாடு என்பதை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜாவின் பதவி விலகல் பிரதிபலிப்பதாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பாக மனோ கணேசன் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு - குருந்தூர் மலை விவகாரம் தொடர்பிலான தீர்ப்பினை அடுத்து, உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக 2 ➤

## நீதிபதிக்கே பாதுகாப்பு இல்லை மக்களைப் பாதுகாப்பது யார்?

### சாணக்கியன் எம்.பி. கேள்வி



கொலை மிரட்டல் காரணமாக ஒரு நீதிபதி பதவி விலகி நாட்டை விட்டுத் தப்பிச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். இந்நிலையில் நாட்டு மக்களின் நிலை என்ன என்பதைக் கற்பனை செய்து பார்க்க வேண்டும், - என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் 2 ➤

## நீதி அமைச்சர் இராஜினாமா செய்ய வேண்டும்! செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு



நாட்டில் நீதித்துறை நேர்மையான முறையில் செயற்படுகின்றதா? என்ற கேள்வியெழுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர், முறையான தீர்ப்பை வழங்கிய நீதிபதி அச்சுறுத்தப்பட்டதை வன்மையாக கண்டிப்பதாகவும், நீதித்துறை என்பது நியாயமான வகையில் செயல்பட வேண்டும் என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்பாக உள்ளது எனவும் ஆனால், தற்போது தமிழ் நீதிபதிகளுக்கு நியாயமாக செயற்பட முடியாத நிலையேற்பட்டுள்ளதுடன் அவர்களை அச்சுறுத்துகின்ற செயற்பாடுகளும் நாட்டில் இடம்பெறுவதாகவும் விசனம் தெரிவித்துள்ளார்.

எனவே, நீதியமைச்சர் இந்த விடயத்தை ஆராய வேண்டும் எனவும், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் இராஜினாமாவில் அழுத்தம், உயிர் அச்சுறுத்தல் என்பன இருக்குமாக இருந்தால் நீதி அமைச்சர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தியுள்ளார். (04)

## நீதிபதியை அழைக்க சட்டமா அதிபருக்கு அதிகாரமில்லை என்கிறார் அம்பிகா!



நீதிபதியை அழைப்பதற்குச் சட்டமா அதிபருக்கு அதிகாரமில்லை, என மனித உரிமை ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைத் தளப்பதிவில், அவ்வாறு அழைத்திருந்தால் அது நீதித்துறையின் சுதந்திரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (04)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## மிருகக்காட்சிசாலையை இலவசமாக பார்வையிடும் வாய்ப்பு சிறார்களுக்கு




எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு, தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு இலவச நுழைவு அனுமதி வழங்கப்படவுள்ளது.

உலக சிறுவர் தினதன்று காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை மிருகக்காட்சிச்சாலைக்கு வருகை தரும் சிறுவர்கள் பங்கேற்கும் வகையில் பல கொண்டாட்ட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

## நீதிபதிக்கே பாதுகாப்பு இல்லை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

சனல் 4 இல் வெளியான தகவல்கள் குறித்து விசாரணை கோரிப் பதிவிட்ட பல இளைஞர்களைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு விசாரணைக்கு அழைத்துள்ள போதிலும், சனல் 4 குற்றம் சாட்டியுள்ள ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு எதிராக விசாரணை எதுவும் இடம்பெறவில்லை - எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## ஜனாதிபதியும் சட்டமா அதிபரும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா தமது பதவியிலிருந்து விலகி இலங்கையை விட்டு வெளியேறியிருந்தார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் இந்தத் தீர்மானம் குறித்து பலர் விமர்சனங்களை முன்வைத்து வரும் நிலையில், நீதித்துறை சுயாதீனத்தன்மையை இழந்துவிட்டதாக தமிழ் அரசியல்வாதிகள் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

இந்தப் பின்னணியில், போலி தேசியவாதிகள் நீதிபதிகளை நாடாளுமன்றத்துக்குள்ளும் நாடாளுமன்றுக்கு வெளியிலும் வெளிப்படையாகத் தாக்கியதாக மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், சிங்கள அரசியல்வாதிகளும் குடிசார் செயற்பாட்டாளர்களும் இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை பாதுகாக்க தவறியுள்ளதாகவும் இதற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு சரியான பதிலை வழங்க தவறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சட்டத்தின் ஆட்சி என்பது அதிகாரப் பகிர்வு மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற மாற்றுக் கருத்துகளை கொண்ட விடயமல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை, இலங்கையில் எஞ்சியிருந்த சட்டத்தின் ஆட்சிக்கு நேரடி சவால் விடுக்கும் வகையிலான செயல் எனவும் மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், ஜேர்மனிக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் ஆகியோர் நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பில் பதிலளிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (க)

## இலங்கையின் சரித்திரத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் நிறுவனமயப்படுத்தப்பட்ட பல விடயங்களிலே நாடாளுமன்றம் மட்டுமல்ல நீதித்துறையும் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. அதைக்குறித்து கவனம் எடுக்க வேண்டிய நிலையில் நாங்கள் இருக்கின்றோம்.

முதல் முறையாக நாட்டின் சரித்திரத்தில் நீதிபதி ஒருவர், தான் வழங்கிய ஒரு தீர்ப்பின் அடிப்படையிலே வந்திருக்கின்ற அச்சுறுத்தலின் காரணமாக, தன்னுடைய உயிர்ப் பாதுகாப்புக்காக நாட்டை விட்டு ஓடியதாக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்படுகின்றன. இது நீதித்துறைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அதி உச்சமான ஓர் அச்சுறுத்தலாகும்.

நாட்டிலே இருக்கின்ற சுயாதீனமான நிறுவனங்களைப் பாதுகாக்க வேண்டிய பாரிய கடப்பாடு அனைவருக்கும் இருக்கின்றது.

அத்தகைய சுயாதீனமான நிறுவனங்களிலே பிரதானமானது நீதித் துறையாகும். நீதித்துறையை பாதுகாக்கின்றபோது, நீதிபதிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதை நாங்கள் கண்டிக்க வேண்டும், தடுக்க வேண்டும். அதே வேளையிலே, நீதித்துறைக்கு உள்ளேயே தவறுகள் இருந்தால் அவற்றைத் திருத்துகின்ற வகையிலே நாங்கள் செயல்பட வேண்டும்.

நீதித்துறைக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றபோது, மூன்று விதமாக அவர்கள் செயல்படலாம். ஒன்று - அந்த அச்சுறுத்தலைக் கணக்கில் எடுக்காமல் தாங்கள் செய்ய வேண்டியதைச் செய்வது. இரண்டாவது - அப்படியான அச்சுறுத்தல் வந்தால், அவர்கள் இராஜினாமாச் செய்து அதிலிருந்து விலகி ஓடுவது. மூன்றாவது நிலைப்பாடு - நீதிபதிகள் அந்த அச்சுறுத்தலுக்கு உள்ளாகி, அதற்கு அடங்கி, தங்களுடைய நடத்தையை அல்லது தீர்ப்பை மாற்றி, மற்றவர்களுடைய கைப்பொம்மையாக இயங்குவது. அதுவும் தடுக்கப்பட வேண்டும்.

நீதித்துறையைப் பாதுகாப்பது என்றால், நீதிபதிகள் என்ன செய்தாலும் அவர்களைப் பாதுகாப்பதல்ல. நீதிபதிகள் சுயாதீனமாகச் செயல்படுவதைப் பாதுகாப்பது, என்று எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்

இன்று காலை வெளியாகியுள்ள இந்தச் செய்தியின் காரணமாக, முக்கியமான எச்சரிக்கையை இந்த வேளையில் கொடுக்க வேண்டும் என நான் நினைக்கின்றேன்.

அரசியலை அரசியல்வாதிகளிடம் விட்டுவிடுங்கள். நாங்கள் மற்ற வேலைகளைப் பார்ப்போம் - என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அரசியல் என்பது தனியே அரசியல்வாதிகளின் கைகளில் விட்டு விடுவதற்கான இலகுவான விடயம் அல்ல. அது அதி முக்கியமான ஒரு விடயம்.

அரசியல் என்பது மக்களுடைய ஆணையை, மக்களுடைய விருப்பத்தை தங்களுடைய பிரதிநிதிகள் மூலமாக செயற்படுத்துகின்ற ஒன்று. அது மக்களுக்காக இயங்குகின்ற ஒன்றாக இருக்க வேண்டும். மக்கள் அதில் தொடர்ந்து ஈடுபடுகின்றவர்களாக இருந்தே ஆக வேண்டும், என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (01)

## முல்லைத்தீவு நீதிபதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கிய முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா, அழுத்தங்களால் பதவி விலக நிர்ப்பந்திக்கப்பட்டு, உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை வெளியேறி உள்ளமை தமிழர்களைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

இந்நிலையில், தமிழ் நீதிபதிகள் தீர்ப்பு வழங்க முடியாத நாட்டின் சட்டவாக்க சபையான நாடாளுமன்றை ஒட்டு மொத்தத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் புறக்கணிக்க வேண்டும்.

குருந்தூர் சட்டவிரோத பௌத்த கட்டுமானம் தொடர்பாக நீதியான தீர்ப்பு வழங்கியமைக்காக தொடர் அழுத்தத்துக்கும் உயிர் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகி, பதவியைத் துறக்க நிர்ப்பந்திக்கப்பட்ட நீதிபதி சரவணராஜாவிற்கு தமிழ்ச்சமூகமாக ஆதரவை வெளிப்படுத்துவதுடன், அவரின் இந்த முடிவுக்குக் காரணமான, அழுத்தங்களைப் பிரயோகித்த சகல தரப்பினர் மீதும் நடவடிக்கை எடுக்கும் வரை தமிழர் சாரந்த அனைத்துக் கட்டமைப்புக்களும் சட்டவாளர்களும் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும்.

நீதியை வழங்கும் நீதிபதிக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பாரதூர நிலையைச் சீர்செய்வதற்கு இலங்கையின் சகல முற்போக்குச் சக்திகளும் சர்வதேசமும் ஐ.நா அமைப்புக்களும், நீதி பரிபாலனம் சுயாதீனமாக இயங்க உச்சபட்ச நடவடிக்கைகளை இந்தத் தீர்க்கமான தருணத்தில் எடுக்க வேண்டும், என வேண்டுகோள் விடுத்துள்ளது. (க)

## நீதிபதி சரவணராஜா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிபதி சரவணராஜா அவர்கள் குருந்தூர் மலையில் தொல்பொருள் திணைக்களத்தினால் சிங்கள பௌத்தத் தேசியவாத நிகழ்ச்சிநிரலின் அடிப்படை யில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்ட மீறல்களை வெளிப்படையாகக் கண்டனம் செய்து, நியாயமான தீர்ப்புக்களை வழங்கிய ஒரு நீதிபதி ஆவார்.

தமிழ் மக்களின் நினைவேந்தல் செயற்பாடுகளுக்கு அரசினால் இடையூறுகள்

ஏற்படுத்தப்பட்ட போதெல்லாம் மக்களின் நினைவேந்தல் உரிமையினை உறுதிப்படுத்தித் தீர்ப்புக்களை வெளியிட்ட ஒருவர். இவ்வாறான நேர்மையும், துணிச்சலும் மிக்க நீதிபதியினை அச்சுறுத்தும் வகையில் தென்னிலங்கையில் உள்ள தீவிர சிங்கள தேசியவாத சக்திகள் வெறுப்புப் பிரசாரங்களை அண்மையிலே முன்னெடுத்திருந்தனர்.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இந்த நீதிபதியினை மிகவும் மோசமான முறையில் விமர்சித்தும் அச்சுறுத்தியும் இருந்தார்.

நீதிபதி சரவணராஜா தனது இராஜினாமாக் கடிதத்திலே தனது உயிருக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் குறித்தும், தாம் எதிர்நோக்கிய அழுத்தம் குறித்தும் குறிப்பிட்டுள்ளார். கடந்த 21 செப்டெம்பர் 2023 அன்று சட்டமா அதிபர் நீதிபதி சரவணராஜாவினை சட்டமா அதிபர் அலுவலகத்திற்கு அழைத்ததாகவும், அந்தச்

சந்திப்பிலே குருந்தூர்மலை விவகாரம் தொடர்பிலே நீதிபதி சரவணராஜா வழங்கிய தீர்ப்புக்களை மாற்றியமைக்கும்படி நீதிபதியின் மீது ஆலோசனை என்ற வடிவத்திலே அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாகவும் ஊடகங்களிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சட்டத்திற்கு அமையத் தன் கடமைகளைச் செய்த ஒரு நீதிபதிக்கே இந்த நிலைமை ஏற்படின், நாளாந்தம் இனவாதச் செயன்முறைகளை எதிர்கொண்டு போராடும் நாட்டின் சிறுபான்மைச் சமூகங்களின் நிலைமை என்ன என்ற கேள்வியும் இங்கே எழுகின்றது.

நீதிபதி சரவணராஜாவுக்கு எதிராக இடம்பெற்ற வெறுப்புப் பிரசாரங்கள், அச்சுறுத்தல்கள், அவரது பணியினை அவர் சுயாதீனமாகச் செய்வதனைத் தடுக்கும் வகையில் அவரின் மீது பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்கள் அனைத்தினையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த முயற்சிகளில் ஈடுபட்ட அனைவரும் நீதிபதி சரவணராஜா இன்று எதிர்கொள்ளும் நெருக்கடி தொடர்பிலே பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்கப்படல் வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோருகிறது.

வடக்குக் கிழக்கின் நீதிக் கட்டமைப்பு இன்று அச்சுறுத்தல்களையும், அழுத்தங்களையும் சந்தித்து வருகிறது. வடக்குக் கிழக்கில் பணியாற்றும் நீதிபதிகள் அச்சுறுத்தப்படுவதற்கு அடிப்படையான காரணமாக அமைவது இலங்கை அரசினது சிங்கள பௌத்த நிகழ்ச்சி நிரலே. தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இந்தப் பிரதேசத்தினை சிங்கள பௌத்த மயமாக்குவதும், தமிழ் மக்களின் நினைவேந்தல் செயன்முறைகளை வலிந்து தடுத்தலும் இந்த நிகழ்ச்சி நிரலின் பகுதிகளாகும். இந்த நிகழ்ச்சி நிரலிற்குத் துணை போகாத நீதிபதிகளும், ஏனைய அரச ஊழியர்களும் பல்வேறு வழிகளில் அச்சுறுத்தலுக்கும், அழுத்தத்துக்கும், நிர்ப்பந்தங்களுக்கும் ஆளாகின்றனர்.

சிங்கள பௌத்த மேலாதிக்கம் ஒழியும் வரை வடக்குக் கிழக்கிலே நீதித் துறையும் சரி ஏனைய நிருவாகத் துறைகளும் சரி பாதிப்பினையே எதிர்கொள்ளும். எனவே, சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை எதிர்த்து, நாட்டின் எல்லா சமூகங்களும் சமத்துவமான முறையிலே வாழ்வதனை உறுதிப்படுத்தும் முயற்சிகளை முன்னெடுப்பதற்கான அணி திரட்டலிலே நாட்டின் எல்லா முற்போக்கு சக்திகளும் இன, மத, பிராந்திய பேதமின்றி ஒன்றிணைய வேண்டும்.

நாடு மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடி ஒன்றிலே அகப்பட்டிருக்கும் இன்றைய நிலையில், இனவாதத்தினைக் கையில் எடுக்கும் அரசியல் சக்திகள், மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் இருந்து அவர்களைத் திசை திருப்பிவிட முயற்சி செய்கின்றனர். நீதிபதி சரவணராஜா போன்றோர் இலக்கு வைக்கப்படுவது இந்த இனவாத முயற்சியின் வடிவமே.

அரசாங்கத்தினதும், சிங்கள மேலாதிக்க சக்திகளினதும் இந்தத் தந்திரோபாயத்தினை விளங்கிக் கொண்டு இனவாதத் தரப்புக்களையும், மக்களின் நலனிலே அக்கறை அற்ற இந்த அரசாங்கத்தினையும் தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

அழுத்தத்துக்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியிருக்கும் நீதிபதி சரவணராஜா மீளவும் தன் பதவிக்குத் திரும்பி, சுயாதீனமான முறையில் தனது கடமைகளைச் செய்யக்கூடிய நிலையினை அரசாங்கம் உடனடியாக ஏற்படுத்த வேண்டும். நீதித் துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும். வடக்குக் கிழக்கிலே நீதித் துறையும், நீதிபதிகளும் எதிர்கொள்ளும் அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

இந்த அழுத்தங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் அடிநாதமாக இருக்கும் அரசாங்கத்தினதும் சிங்கள பௌத்த மேலாண்மைவாத சக்திகளினதும் இனவாதம் முறியடிக்கப்பட வேண்டும். இந்த நோக்கங்களுக்காக நாட்டு மக்கள் அனைவரும் குரல் கொடுக்க வேண்டியது அவசியம், என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகிறது, என்று குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

# முதலைக்குடா விஞ்ஞான மாணவர்களை அவுஸ்திரேலியா மைக்கேலிஸ்ட் சந்திப்பு



(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு மேற்கு வலய முதலைக்குடா மற்றும் அரசடித்தீவு விஞ்ஞான மாணவர்களை அவுஸ்திரேலியா மைக்கேலிஸ்ட் அமைப்பு சந்தித்து கலந்துரையாடியது.

முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் அதிபர் வை.சுந்தரநாதன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை இச்சந்திப்பு நடைபெற்றது.

மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் பயின்று அவுஸ்திரேலியாவில் வாழும் அவுஸ்திரேலியா மைக்கேலிஸ்ட் கிளையின் தலைவர் டொக்டர். ரி.சிவசீலன் பிர தம அதியாகக் கலந்து சிறப்பித்தார். அவருடன் மூன்று மைக்கேலிஸ்ற் கலந்து கொண்டனர். முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் இம்முறை வைத்தியத்துறைக்குத் தெரிவான மாணவன் சொர்ணலிங்கம் ஜோதிசன் என்ற மாணவனுக்கு தலைவர் டொக்டர் சிவசீலன் லப்ரொப் கணினியை அன்பளிப்புச் செய்தார்.

அத்துடன் இந்தச் சந்திப்பில் முதலைக்குடா மகா வித்தியாலயம் மற்றும் அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த விஞ்ஞான மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள ஆலோசனைகளை அவுஸ்திரேலியா மைக்கலிஸ்ற் கிளை அமைப்பினர் வழங்கினார்கள்.

அங்கு முன்னாள் கோட்டக் கல்விப்பணிப்பாளர் என்.தயாசீலன் முன்னாள் அதிபர் தவிசாளர் சிவஞானம் அகிலேஷ்வரன் உள்ளிட்டோரும் பிரசன்னமாயிருந்தனர்.

அரசடித்தீவு விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்திற்கு ஒரு தொகுதி கணிப்பான்களை இந்த அமைப்பு வழங்கி வைத்தது. எதிர்காலத்தில் கணித விஞ்ஞானத் துறையில் இத்தகைய பின்தங்கிய பிரதேச மாணவர்கள் மேலும் சாதனை படைக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டதாக டொக்டர். சிவசீலன் தெரிவித்தார்.

# சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் "நபிகளாரை நேசிப்போம் - மீலாத் விழா"



(நூருல் ஹுதா உமர்)

உலகுக்கு அருட்கொடையாக வந்துதித்த நபிகள் நாயகத்தின் பிறந்தநாளான நேற்று, புனித மீலாத்தை முன்னிட்டு சாய்ந்தமருது கலாச்சார மத்தியநிலையமும், சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய்யா கலாபீடமும் இணைந்து நடத்திய "நபிகளாரை நேசிப்போம் - மீலாத் விழா" நிகழ்வுகள் சாய்ந்தமருது கலாச்சார மத்திய நிலைய பொறுப்பதிகாரி யூ.எல்.எம். ரிம்ஸானின் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய்யா கலாபீட அதிபர் தலைமையில் சாய்ந்தமருது கலாச்சார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

சாய்ந்தமருது கலாச்சார மத்தியநிலைய பிரதி செயலாளர் யூ.எல்.என்.ஹுதா உமர் தொகுத்து வழங்கிய சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய்யா கலாபீட மாணவர்களின் கலை, கலாச்சார நிகழ்வுகளும், நபிகளாரின் வாழ்வு தொடர்பிலான உரைகளும் இடம்பெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆபிகா கலந்து கொண்டதுடன், சாய்ந்தமருது பிரதேச செயலக நிதி உதவியாளர் எம்.சி. முஹம்மட், சாய்ந்தமருது ஜ/ம்மா பெரியபள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் ஏ. ஹிபத்துள் கரீம், செயலாளர் எம்.ஐ.எம். மன்சூர், சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஏ.எம். பர்ஹான், சாய்ந்தமருது கலாச்சார உத்தியோகத்தர் ஏ.எச். சபீகா, சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ். சுரேஷ், தஃவா இஸ்லாமிய்யா கலாபீட செயலாளர் ஐ.எல்.ஏ. இப்ராஹிம், தஃவா இஸ்லாமிய்யா கலாபீட ஆசிரியர்கள், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய உறுப்பினர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பல்வேறு போட்டிகளிலும் நிகழ்வுகளிலும் பல்வேறு விடயங்களிலும் தமது திறமைகளை வெளிக்காட்டிய மாணவர்கள், சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# கலாசாலை தொடங்கிய நாள் நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை

கோப்பாய் ஆசிரிய கலாசாலை நிறுவப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவுறுவதைக் குறிக்கும் வகையில் கல்லூரித் தினவிழா, ஒக்டோபர் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராகவும், கலாசாலையின் முன்னாள் அதிபர்களான வே.கா. கணபதிப்பிள்ளை, வீ. கருணலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய அதிபர் சாந்தினி வாகீசன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கலாசாலையின் ஓய்வுநிலை பிரதி முதல்வர் பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு எழுதிய வடக்கின் ஆசிரிய கலாசாலைகள் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை பற்றிய சிறப்பாய்வு என்ற நூல் வெளியிட்டுவைக்கப்படவுள்ளது. அத்துடன், விரிவுரையாளர் தர்சினி முத்துராஜாவை பிரதம ஆசிரியராகக் கொண்ட கலாதீபம் மாத இதழின் கல்லூரித்தின சிறப்புப் பிரதியும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் சமயத் தலைவர்களின் ஆசியுரை, நூற்றாண்டைக் குறிக்கும் முகமாக 100 நிறைகுடங்கள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களுடனான ஊர்வலம் என்பன இடம்பெறவுள்ளதாகவும், கலாசாலையின் பழைய மாணவர்களை நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறும் நூற்றாண்டு விழா ஏற்பாட்டுக்குழுவினர் அழைத்துள்ளனர். (04)




தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
உலக சுற்றுலா தினம்
2023
செப்டெம்பர்
27, 28, 29
மாலை
4.00 மணி
தொடக்கம்
இரவு
9.00 மணி
வரை
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
The Thinnai
Jetwing
JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
Chrysalis
Catalyzing change
ஊடக அனுசரணையாளர் :-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# உக்ரைனில் மேற்கத்திய நாடுகளுடனும் மோதல் ராணுவ பட்ஜெட்டை 70 வீதம் அதிகரிக்கும் ரஷ்யா

உக்ரைனில் அந்த நாட்டு ராணுவத்தோடு மட்டுமின்றி மேற்கத்திய நாடுகளுடனும் போரிட வேண்டியிருப்பதால், பாதுகாப்புக்கான தனது பட்ஜெட்டை 70 சதவீதம் அதிகரிக்கவிருப்பதாக ரஷ்யா நேற்று தெரிவித்துள்ளது. இது குறித்து ஏஎப்பி செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

ரஷ்ய நிதியமைச்சகத்தின் திட்ட ஆவணம் வியாழக்கிழமை வெளியிடப்பட்டது. அதில், பாதுகாப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை 10.8 லட்சம் கோடி ரூபிளாக அதிகரிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, கடந்த நிதியாண்டு பட்ஜெட்டை விட சுமார் 68 சதவீதம் அதிகமாகும். இந்த அளவுக்கு நிதி ஒதுக்கீட்டை அதிகரிப்பது மிகவும் அவசியமானதே என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

இது குறித்து ரஷ்ய அரசின் செய்தித் தொடர்பாளர் டிமித்ரி பெஸ்கோவ் கூறுகையில், உக்ரைனில் ரஷ்யா இரண்டு எதிரிகளுடன் மோதிக் கொண்டிருக்கிறது. அந்தப் போரில் ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைன் மட்டுமின்றி, மேற்கத்திய நாடுகளின் கூட்டணியும் களமிறங்கியுள்ளது. இந்த 'இரட்டைப் போரை' சமாளிப்பதற்கு மிக அதிக நிதி தேவைப்படுகிறது. எனவே, ராணுவத்துக்கான பட்ஜெட் 68 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது மிகவும் அவசியமானதே ஆகும்' என்றார்.

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் படையெடுத்து, கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனின் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியது. அந்தப் பகுதிகளை மீட்பதற்காக மேற்கத்திய நாடுகளின் உதவியுடன் உக்ரைன் எதிர்த் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில், உக்ரைனின் போரிடும் திறனைக் குறைப்பதற்காக அந்த நாட்டின் தலைநகர் கீவ் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆளில்லா விமான குண்டுகள், ஏவுகணைகள், எறிகணைகள் மூலம் ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. உக்ரைனும், ரஷ்யாவின் விமானத் தளங்கள், போர்க் கப்பல்கள், துறைமுகங்கள், தலைநகர் மொஸ்கோ போன்ற பகுதிகளில் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்தப் போரில் ரஷ்யாவுக்கு எதிராகப் பயன்படுத்துவதற்கு அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் அதிநவீன ஆயுதங்களை உக்ரைனுக்கு அளித்து வருகின்றன.

சக்திவாய்ந்த பீரங்கிகள் உள்ளிட்ட அந்த ஆயுதங்களை உக்ரைனுக்கு அளிப்பதன் மூலம் இந்தப் போரில் மேற்கத்திய நாடுகள் நேரடியாகப் பங்கேற்பதாக ரஷ்யா குற்றம் சாட்டி வருகிறது. மேற்கத்திய நாடுகளின் இந்தச் செயல் போரின் முடிவில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது, அது உயிரிழப்புகளைத்தான் அதிகரிக்கும் என்று ரஷ்யா கூறி வருகிறது.

ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைனுக்கு ஆயுதங்களை வாரி வழங்குவதன் மூலம், கடைசி உக்ரைனியர் இருக்கும் வரை போரை நீடிக்க மேற்கத்திய நாடுகள் விரும்புவதாக ரஷ்யா குற்றஞ்சாட்டி வருகிறது.

இந்தச் சூழலில், உக்ரைன் போரில் மேற்கத்திய நாடுகளும் ஈடுபட்டுள்ளதால் தனது ராணுவ பட்ஜெட்டை 68 சதவீதம் அதிகரிக்கவிருப்பதாக ரஷ்யா தற்போது அறிவித்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (04)




# நகோர்னோ - கராபக் குடியரசு கலைக்கப்படுமென அறிவிப்பு

அசர்பைஜானுக்கும், ஆர்மீனியாவுக்கும் இடையே தனி நாடாக இயங்கி வந்த நகோர்னா-கராபக் குடியரசு கலைக்கப்படுவதாக பிராந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பிராந்தியத்தை அசர்பைஜான் படைகள் அண்மையில் கைப்பற்றியதைத் தொடர்ந்து சர்வதேச நாடுகளால் அங்கீகரிக்கப்படாத அந்தக் குடியரசு கலைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பிராந்திய அதிகாரிகள் தகவல் வழங்கியபோது, நகோர்னோ-கராபக் குடியரசைக் கலைக்கும் அரசாணையில் அதிபர் சாம்வெல் ஷாராமானயன் கையொப்பமிட்டுள்ளார். வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் குடியரசு கலைக்கப்பட வேண்டும் என்று அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தத் திகதிக்குப் பிறகு நகோர்னோ-கராபக் குடியரசு என்ற ஆட்சியமைப்பே இருக்காது, என்று தெரிவித்தனர்.

இதற்கிடையே, அசர்பைஜான் அரசால் துன்புறுத்தப்படலாம் என்ற அச்சத்தின் பேரில், அந்தப் பிராந்தியத்திலிருந்து இதுவரை 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட ஆர்மீனியப் பழங்குடியினர் வெளியேறி ஆர்மீனியாவில் தஞ்சமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சோவியத் யூனியனின் முன்னாள் உறுப்பு நாடுகளான ஆர்மீனியாவுக்கும், அசர்பைஜானுக்கும் இடையில் அமைந்துள்ள நகோர்னோ-கராபக் பிராந்தியம் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் நீடித்து வருகிறது. ஆர்மீனியப் பழங்குடியினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட அந்தப் பிராந்தியத்தை அசர்பைஜானின் ஓர் அங்கமாக சர்வதேச நாடுகள் அங்கீகரித்தன.

இருந்தாலும், கடந்த 1994 ஆம் ஆண்டு போருக்குப் பிறகு ஆர்மீனியப் படையினரின் ஆதரவுடன் அந்தப் பகுதியை பிரிவினைவாதிகள் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அதன் பிறகு அந்தப் பிராந்தியத்தில் ஆர்மீனியாவும், அசர்பைஜானும் அவ்வப்போது மோதலில் ஈடுபட்டு வந்தன. (04)

# உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல் சோதனைக்கான ஒப்படைத்த தாய்வான் அதிபர்



உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கிக் கப்பலை தாய்வான் அதிபர் சுய்ங் வென் சோதனைக்காக நேற்று கையளித்துள்ளார்.

கடந்த 7 ஆண்டுகளாக உருவாக்கப்பட்ட இந்த நீர்மூழ்கிக் கப்பலின் சோதனை வெற்றிபெற்றால் கப்பல் கட்டுமானத்திலும், தொழிநுட்பத்திலும் தாய்வானுக்கு வலுசேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'உள்நாட்டில் நீர்மூழ்கிக் கப்பலைத் தயாரிக்க முடியாது என்று முன்பு கூறி வந்தனர். தற்போது அதனை நாம் சாத்தியமாக்கி உள்ளோம். நாட்டைப் பாதுகாக்கவும், எதிர்த் தாக்குதலுக்கான உத்திகளை வகுக்கவும் தாய்வான் கடற்படைக்கு நீர்மூழ்கிக் கப்பல் பெரும் உதவியாக இருக்கும்' என்று அதிபர் சுய்ங் வென் தெரிவித்தார்.

தனது கட்டுப்பாட்டில் தாய்வானை வைத்திருக்க சீனா பல்வேறு முயற்சிகளை செய்து வருகிறது. இதை எதிர்க்கும் நோக்கில் தாய்வானின் ராணுவத்தைப் பலப்படுத்துவதற்கான உதவிகளை அமெரிக்கா செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (04)

# வட கொரியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட அமெரிக்க வீரர்



வட கொரியாவுக்குள் கடந்த ஜூலை மாதம் அத்துமீறி நுழைந்த அமெரிக்க ராணுவ வீரர் ட்ராவிஸ் கிங், திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தென் கொரியாவுக்குச் சுற்றுலாப் பயணியாகச் சென்றிருந்த ட்ராவிஸ் கிங் என்ற அமெரிக்க ராணுவவீரர், அங்கு தாக்குதல் முயற்சிக் குற்றச்சாட்டின் பேரில் 2 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் கடந்த ஜூலை மாதம் விடுதலை செய்யப்பட்ட அவர், அமெரிக்காவுக்கு அனுப்பப்படவிருந்தார்.

ஆனால், சட்டவிரோதமாக அவர் எல்லையைக் கடந்து வட கொரியாவுக்குள் தஞ்சமடைந்தார். இந்த நிலையில், அமெரிக்காவின் கறுப்பினப் பாகுபாடு காரணமாக தங்கள் நாட்டுக்குள் வந்ததாக ட்ராவிஸ் கிங் கூறியதாகவும், அவர் சட்டவிரோதமாக வந்ததால் அவரை அமெரிக்காவிடம் தாங்கள் ஒப்படைக்கவிருப்பதாகவும் வட கொரிய அரசு கடந்த செவ்வாய்க்கிழமை கூறியிருந்தது.

இந்த நிலையில், ட்ராவிஸ் கிங் தங்களது பாதுகாப்பில் தற்போது இருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் நேற்று அறிவித்துள்ளனர். (04)

# வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி

## தமிழ்நாட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு




வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதனுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், பசிப்பிணி ஒழிப்பு - உணவுப் பாதுகாப்பு என்ற இரு குறிக்கோள்களுக்காகக் கடந்த முக்கால் நூற்றாண்டு காலம் அரும்பணி ஆற்றி வந்த தலைசிறந்த வேளாண் அறிவியலாளர் எம்.எஸ்.சுவாமிநாதன் மறைந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்துகிறேன் என்று தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

நீடித்து நிலைத்த உணவுப் பாதுகாப்புக்காக ஆற்றிய பங்களிப்புகளுக்காக பசுமைப் புரட்சியின் தந்தை எனப் பரவலாகப் போற்றப்படும் சுவாமிநாதன், உலக அரிசி ஆராய்ச்சி நிறுவனம், இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் முதலிய பல்வேறு பன்னாட்டு மற்றும் அரசு ஆராய்ச்சி நிறுவனங்களின் உயர் பொறுப்புகளில் பணியாற்றிய சிறப்புக்குரியவர் ஆவார்.

சமூகத் தலைமைக்கான ராமன் மகசேசே விருது, பத்ம ஸ்ரீ, பத்ம பூசன், பத்ம விபூசன் உள்ளிட்ட பல்வேறு உயரிய விருதுகளை சுவாமிநாதன் பெற்றுள்ளார். உலகம் போற்றும் விஞ்ஞானியாக சுற்றுச்சூழல் வேளாண்மைத்துறையில் அளப்பரிய பங்காற்றிய சுவாமிநாதனை கவுரவிக்கும் விதமாக அவருக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தப்படும் என்றும் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார். (04)


வட மாகாண
சுற்றுலாப் பணியகமும்
தொழிற்துறைத் திணைக்களமும்
இணைந்து நடாத்தும்
உலக சுற்றுலா தினம் - 2023
வடக்கின் திருவிழா
பாரம்பரிய இசை மற்றும் நடன நிகழ்வுகள்
கைவினைப் பொருட்கள் விற்பனை
உணவு விற்பனை
நீர் விளையாட்டுக்கள்
29.09.2023
காலை 09.00 - இரவு 09.00
WORLD TOURISM DAY 2023
TOURISM & GREEN INVESTMENTS
இடம்: யாழ்ப்பாண கலாசார நிலையம்
ஊடக அனுசரணை :
காலைக்கதிர்
Kalaikkathir

# அடுத்த மாதத்திற்குள் இறக்குமதித் தடைகள் நீக்கப்படுமென பதில் நிதியமைச்சர் அறிவிப்பு



வாகனங்கள் தவிர்ந்த ஏனையவற்றுக்கான இறக்குமதித் தடைகள் அடுத்த மாதத்திற்குள் நீக்கப்படும் என பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்பார்த்த அளவு பொருளாதார வளர்ச்சி மற்றும் வெளிநாட்டுக் கையிருப்பு அதிகரித்த தன் பின்னர், வாகன இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்குவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. நாட்டின் அந்நிய செலாவணியின் கையிருப்பை கருத்திற்கொண்டே, இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது குறித்துத் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. தற்போதைய நிலைமையில் வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாட்டை தளர்த்துவதற்கான சந்தர்ப்பம் இல்லை, எனவும் அவர் கூறினார்.

எதிர்வரும் காலப்பகுதியில் அந்நிய செலாவணியின் கையிருப்பின் அடிப்படையில் வாகனங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை படிப்படியாக நீக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்படும் எனவும், பதில் நிதியமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (க)

# உலகக் கிண்ண இந்திய அணியில் தமிழக வீரர் அஷ்வின் இணைப்பு!



உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் களம் காண இருக்கும் இந்திய அணியில், காயமடைந்துள்ள அக்ஸா் படேலுக்குப் பதிலாக தமிழக வீரா் ரவிச்சந்திரன் அஷ்வின் இணைக்கப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடர் போட்டியின்போது காயமடைந்த அக்ஸா் படேல், விரைவில் குணமடைய வாய்ப்பில்லை எனத் தெரியவந்ததை அடுத்து, அஜித் அகா்கா் தலைமையிலான தோ்வுக் குழு அவருக்குப் பதிலாக அஷ்வினை அணியில் சோ்த்திருக்கிறது.

இதையடுத்து, நாளை இங்கிலாந்துடன் பயிற்சி ஆட்டத்தில் விளையாடுவதற்காக குவாஹாட்டி சென்ற இந்திய அணியில் அஷ்வினும் இணைந்திருக்கிறாா்.

கிட்டத்தட்ட 2 வருடங்களுக்குப் பிறகு இந்திய ஒருநாள் அணியில் இடம்பிடித்த அஷ்வின், அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரில் 2 போட்டிகளில் விளையாடி 4 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

அணி விவரம்: ரோஹித் சா்மா (தலைவர்), ஹா்திக் பாண்டியா (துணைத் தலைவர்), ப்மன் கில், விராட் கோலி, ஷ்ரேயஸ் ஐயா், கே.எல்.ராகுல், ரவீந்திர ஜடேஜா, ஷா்துல் தாக்குா், ஜஸ்பிரீத் பும்ரா, மொகமட் சிராஜ், குல்தீப் யாதவ், மொகமட் ஷமி, ரவிச்சந்திரன் அஷ்வின், இஷான் கிஷண், சூா்யகுமாா் யாதவ். (04)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் பயிற்சி ஆட்டங்கள் இன்று ஆரம்பம்!




10 அணிகள் பங்கேற்கும் 13 ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் வருகிற ஒக்டோபர் 5 ஆம் திகதி இந்தியாவின் அகமதாபாத்தில் தொடங்குகிறது.

இதையொட்டி, அணிகள் தயாராகும் பொருட்டு ஒவ்வொரு அணிக்கும் தலா 2 பயிற்சி ஆட்டங்களை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) ஏற்பாடு செய்துள்ளது. இந்தப் பயிற்சி ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகியுள்ளன. முதல் நாளில் 3 ஆட்டங்கள் நடக்கின்றன.

ஹைதராபாத்தில் நடக்கும் போட்டியில் பாகிஸ்தான் அணி, நியூசிலாந்தை எதிர்கொள்கிறது. 7 ஆண்டுக்கு பிறகு இந்தியாவுக்கு வருகை தந்துள்ள பாகிஸ்தான் அணிக்கு விமான நிலையத்தில் ரசிகர்கள் நீண்ட வரிசையில் நின்று உற்சாகமாக வரவேற்பு அளித்ததைக் கண்டு பாகிஸ்தான் வீரர்கள் நெகிழ்ந்து போனார்கள். ‘ஹைதராபாத்தில் ரசிகர்களின் அன்பும் ஆதரவும் திகைக்க வைத்தது’ என்று அணித்தலைவர் பாபர் அசாம் சமூக வலைதளத்தில் பதிவிட்டார். அவர்கள் கிட்டத்தட்ட 2 வாரம் ஐதராபாத்தில் தங்குகிறார்கள். வீரர்கள் தங்கியுள்ள ஹோட்டலுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

உடனடியாக பயிற்சியை தொடங்கிய பாகிஸ்தான் வீரர்கள் பயிற்சி ஆட்டத்தை சரியாக பயன்படுத்திக் கொள்ளும் முனைப்புடன் உள்ளனர். ஏனெனில் அந்த அணி உலகக் கிண்ணத் தொடரில் தனது முதல் ஆட்டத்தை இங்கு தான் 6 ஆம் திகதி நெதர்லாந்துக்கு எதிராக விளையாடவிருக்கிறது.

நியூசிலாந்து அணியில் காயத்தால் கடந்த மார்ச் 31க்குப் பிறகு எந்தப் போட்டியிலும் விளையாடாத கப்டன் கேன் வில்லியம்சனுக்கும் இந்தப் போட்டி முக்கியத்துவம் பெறுகிறது. பயிற்சிப் போட்டி என்றாலும் முழு உத்வேகத்துடன் ஆடுவதற்கு நியூசிலாந்து வீரர்கள் களமிறங்கியுள்ளனர். பண்டிகைக் காலம் என்பதால் பாதுகாப்பு அளிப்பது சிரமம் என்று உள்ளூர் பொலிசார் ஏற்கனவே அறிவித்துவிட்டதால், இந்த ஆட்டத்திற்கு மைதானத்தில் பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

திருவனந்தபுரத்தில் நடக்கும் மற்றொரு பயிற்சி ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி, ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது. தென்னாபிரிக்க கப்டன் பவுமா, தனிப்பட்ட வியடம் காரணமாக அவசரமாக தாயகம் திரும்பியுள்ளார். இதனால் இரு பயிற்சி ஆட்டங்களிலும் அவர் விளையாடமாட்டார். எனினும், தொடரின் முதல் போட்டிக்கு முன்பாக அணியுடன் அவர் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பயிற்சிப் போட்டிக்கு அந்த அணியை மார்க்ரம் வழிநடத்துகிறார்.

அசாம் மாநிலம் கவுகாத்தியில் நடக்கும் மற்றொரு பயிற்சி ஆட்டத்தில் தசுன் சானக தலைமையிலான இலங்கை அணி, பங்காளதேசத்தை எதிர்கொண்டு விளையாடுகிறது. (04)



# யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் சுற்றுலா தின - வடக்கின் திருவிழா!







உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம், தொழிற்துறைத் திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் வடக்கின் திருவிழா எனும் சிறப்பு நிகழ்வு இடம்பெறுகின்றது. சுற்றுலா தினத்தின் இந்த ஆண்டுக் கான சுற்றுலா மற்றும் பசுமை முதலீடு எனும்கருப்பொருளில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் இன்று 29 ஆம் திகதி காலை 9 மணி அளவில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியுள்ளது.

வடக்கின் திருவிழாவின் ஆரம்ப நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ், சுற்றுலா பணியக அதிகாரிகள், அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இரவு 9 மணி வரை இடம்பெறவுள்ள குறித்த நிகழ்வில், தமிழர் பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையிலான கிராமிய நடனங்களான மயிலாட்டம், ஒயிலாட்டம், சிரட்டைக் கும்மி, வசந்தன் கூத்து மற்றும் நர்த்தனம் என்பவற்றோடு கைவினைப் பொருட்கள் விற்பனை, உணவு விற்பனை, நீர் விளையாட்டுக்கள் என்பனவும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் தேர்த்திருவிழா இன்று காலை




நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா இன்று காலை நடைபெற்றது.

யாழ்ப்பாண அரசவம்சத்தை சேர்ந்த முதலமைச்சர் அரசகேசரியால் நிறுவப்பட்ட பெருமைக்குரிய ஆலயம் இதுவாகும். இங்கு அரசகேசரிக்குத்திருவுருவச்சிலையும்உள்ளது.

தேர்த் திருவிழாவின்போது அங்கு அரசகேசரி வருகை தருவதாகவும் அவருக்கு பரிவட்டம் கட்டி வரவேற்பதாகவுமாக நிகழ்வு சம்பிரதாயப்படி நடைபெற்றது.

நீர்வேலியின் மூத்த சிவாச்சாரியார் வண. நீர்வை மணி கு.தியாகராஜக் குருக்கள், ஆலய மூத்த குரு சிவஸ்ரீ சா. சோமதேவக் குருக்கள் மற்றும் குருமார் இணைந்து அரசகேசரியை வரவேற்பதாக மந்திரம் ஓதி, சடங்குகளை மேற்கொண்டனர்.

# பீட்டர் கெனமன் 106 ஆவது நினைவு தினம் ஒக்டோபர் 3 ஆம் திகதி அனுஷ்டிப்பு



இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் முக்கியஸ்தரும், இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் செயலாளரும், முன்னாள் வீடமைப்பு மற்றும் நீர்மானத்துறை அமைச்சருமான பீட்டர் கெனமனின் 106 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு எதிர்வரும் ஒக்டோபர் 3ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கொழும்பு, மருதானை எல்பின்ஸ்டன் திரையரங்கிற்கு எதிரே உள்ள பீட்டர் கெனமன் ஞாபகார்த்த சிலைக்கு மலர்மாலை அணிவிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது என பீட்டர் கெனமன் நினைவேந்தல் குழுவின் பிரதம அமைப்பாளர் ஆர்.ஸ்டீபன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி, வீரசுமண வீரசிங்க, முன்னாள் அமைச்சர் டியூ குணசேகர, இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி ஜி.வீரசிங்க மற்றும் முன்னாள் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால ஆகியோர் உரையாற்றவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெ-01)

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் இணையவழி பாதுகாப்பு சட்டமூலங்களுக்கு சட்டத்தரணிகள் சங்கம் எதிர்ப்பு தெரிவிப்பு

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலங்கள் சமூகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துபவை என்பதால், அவற்றுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த இரண்டு சட்டமூலங்களையும் உடனடியாக மீளப் பெறுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத் தெரிவித்துள்ளார். இந்த இரண்டு சட்டமூலங்களும் மனித சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை கடுமையாகப் பாதிப்பதால் அவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படக் கூடாது என்றும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்த இரண்டு சட்டங்களின் உள்ளடக்கங்களும் சட்டமாக மாறினால் இந்நாட்டு மக்களின் உரிமைகள் முற்றாக நசுக்கப்படும். எனவே, இந்த இரண்டு சட்டங்களையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டாம், என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அழுத்தங்களைக் கொடுக்கும் எனவும் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரெ- 19)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.09.2023இல் வெளியிடப்பெற்றது.